KALLAKURICHI DISTRICT

வகுப்பு : 11

தேர்வு எண்

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022 -23

நேரம் : 3.00 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

## பகுதி – I

**குறிப்பு: அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **14X1=14**

**ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.**

1. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடி.

அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம் இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்

2. "வான் பொய்த்தது" – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்

அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை

இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது

3. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. வெள்ளிவீதியார் – அ) புறநானூறு
2. அண்ணாமலையார் – ஆ) சி.சு.செல்லப்பா
3. வாடிவாசல் – இ) குறுந்தொகை
4. இளம்பெருவழுதி – ஈ) காவடிச்சிந்து

அ) அ ஆ இ ஈ ஆ) ஆ ஈ அ இ இ) இ ஈ ஆ அ ஈ) இ ஈ அ ஆ

4. "ஒப்புரவு" என்பதன் பொருள் -----

அ) அடக்கமுடைமை ஆ) பண்புடையது இ) ஊருக்கு உதவுவது ஈ) செல்வமுடையது

5. தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை

அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

6. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு

அ) உரிச்சொற்றொடர், ஈற்றுப்போலி ஆ) வினைத்தொகை, இடவாகுபெயர்

இ) வினையெச்சம், வினைத்தொகை ஈ) பெயரெச்சம், பண்புத்தொகை

7. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ---- நினை

அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை

இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லோர் உழவரை

8. கூற்று 1 : தஞ்சை பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே.கோவிந்தசாமி கண்டறிந்தார்.

கூற்று 2 : அங்குள்ள சோழர்காலத்து ஓவியங்கள் ஃபிராஸ்கோ வகையைச் சார்ந்தவை.

அ) கூற்று 1 சரி ; கூற்று 2 தவறு ஆ) இரண்டு கூற்றுகளும் தவறு

இ) கூற்று 1 தவறு; கூற்று 2 சரி ஈ) இரண்டு கூற்றுகளும் சரி



CamScanner

9. அழகும், அறிவும், இளமையும் வாய்ந்தவன் – யார் யாரிடம் கூறியது

அ) அமைச்சர், கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்

10. பூஜை, விஷயம், உபயோகம் – என்பவை முறையே ---- என்று வழங்கப்படும்

அ) வழிபாடு, செய்தி, பயன்பாடு ஆ) பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ) வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ) செய்தி, பயன்பாடு, வழிபாடு

11. கழுகுமலைத் தலைவன்

அ) சிவன் ஆ) முருகன் இ) வருணன் ஈ) திருமால்

12. மாற்றான் எனக் கூறப்படுபவன்

அ) நண்பன் ஆ) பகைவன் இ) அரசன் ஈ) அமைச்சன்

13. "பிம்பம்" என்னும் சிறுகதையின் ஆசிரியர்

அ) கல்கி ஆ) ஜெயகாந்தன் இ) பிரபஞ்சன் ஈ) ஜெயமோகன்

14. எட்டுத்தொகை நூல்களுள் இடம்பெறாத நூல்

அ) குறுந்தொகை ஆ) அகநானூறு இ) புறநானூறு ஈ) பட்டினப்பாலை

## பகுதி – II பிரிவு–1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** **3x2=6**

15. பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

16. காவடிச் சிந்து என்பது யாது?

17. ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்

தீன் எனுஞ் செல்வமே பழுத்த சேணகர்!" –இப்பாடலடிகளில் ஒளிரக் காய்ந்தது எது? பழுத்தது எது?

18. செந்துறைப் பாடாண் பாட்டு – துறை விளக்கம் தருக.

## பிரிவு–2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** **2x2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.

20. உ.வே.சா அவர்கள் பயின்ற கல்விமுறை குறித்துக் குறிப்பு வரைக.

21. "மேடையில் வாழ்ந்த மனிதர்" – என்று ஜீவாவைப் பற்றி சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

## பிரிவு–3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** **7x2=14**

22. **கலைச்சொல் எழுதுக.** அ) Migration ஆ) Art Critic

23. **ஒரே தொடரில் அமைத்து எழுதுக.** குரை, குறை

24. **வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.**

தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்து கால்வாய் வெட்டிப் பாசனம் செய்தனர்.

25. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.** வைகை

26. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?

27. **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

சேரன்–வில், சோழன் ----------, -------- மீன்



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

28.பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. புள்ளைக்கு உடம்பு சரியில்லை. மூனு நாளா சிரமப்படுது

29.ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக. அ) மாசற்றார் ஆ) பொதுச் சிறப்பு

30.ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக. அ) ஈன்ற ஆ) பேசான்

பகுதி – III பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. "சலச வாவியில் செங்கயல் பாயும்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

32. உள்ளுறை உவமை, இறைச்சி – எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

33. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உந்தன் கனவை உம்முடைய சொந்த சொற்களில் விளக்குக.

34. அப்துல் ரகுமானின் கவிதையிலிருந்து வினா – விடை வடிவத்திற்கு ஏற்ற அடிகளைத் தருக.

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. "என்னுயிர் தமிழ்மொழி என்பேன்" என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப்பற்றினை எழுதுக.

36. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி விளக்குக.

38. ஜீவாவின் பேச்சு நடை குறித்து சுந்தர ராமசாமி கூறுவன யாவை?

பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. உவமையணி (அல்லது) பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

40. குறிஞ்சித்திணை (அல்லது) பொருண்மொழிக் காஞ்சித் துறையைச் சான்றுடன் விளக்குக.

41. இலக்கிய நயம் பாராட்டுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக்குள்ளே சிலமூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்.
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர்.

*–பாரதியார்*

42. தமிழாக்கம் தருக.

1. Winners don't do different, they do things differently.
2. A Picture is worth a thousand words.
3. Education is the most powerful weapon, which you can use to change the world.
4. Looking at Beauty in the world, is the first step of purifing the mind.



CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

42. காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா.

பின்வரும் பத்தியைக் கவனமாகப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

'தமிழ்' என்ற சொல் தமிழர்க்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. தமிழ் என்ற சொல்லை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

"அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்" என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமிழ்' எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் "பல்கலைப் புலமை" என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. "தமிழ்கெழு கூடல்" என்ற விடத்திலும் "கலைப்புலமை"என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் "தமிழ் தழீஇய சாயலவர்" என்னும் இடத்து தமிழ் என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்' பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன"தமிழ் இவை பத்துமே" மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பதுபாட்டுக்களாலான திருப்பாவையை ஆண்டாள் "தமிழ்மாலை" என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

வினாக்கள்:

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக.
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.

43. வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக. எதிர்நீச்சல் அல்லது மதில்மேல் பூனை.

## பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. **3x6=18**

44. (அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

(அல்லது)

ஆ) கொடையில் சிறந்து விளக்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

45. அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும், எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்கவும். (அல்லது)

ஆ) "கல்லும் கதை சொல்லும்" – என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. (அ) பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை? (அல்லது)

ஆ) சிம்பொனித் தமிழரும், ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி வழி தொகுத்துரைக்கவும்.

## பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக: **4+2=6**

47. அ) "அம்மவாழி......." எனத் தொடங்கும் குறுந்தொகை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) '....... பொருட்டு' என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.



CamScanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com